International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 05 Issue: 02 April to June 2023 www.irjtsjournal.org

# இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு: சவால்களும், சந்தர்ப்பங்களும்

# Quota system for women in Local government elections in Sri Lanka

# Challenges and Opportunities

அ. கண்ணேராஜ்.

சிரேஷ்ட விரிவுரையாளர்,

சமூகவிஞ்ஞானங்கள் துறை,கலைகலாசாரபீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## Abstract:

*The 2018 local government election is the first local government election that based on quota system for women in Sri Lanka. It is evident that women representation in local government bodies was considerably increased by this election than ever before. However, it is questionable whether the expected political goals were achieved by the increase in women representation in local government bodies. Considering this issue as research problem, this study focuses on the challenges and issues of the quota system for women.*

*This study is based on qualitative method and mostly used the secondary information related with the said election results and records.*

*This study found that the 2018 election and its quota system for women has just impacted on increasing the number of women representatives in the local government bodies than achieving the expected political goals in the local government system in a meaningful and efficient way through the women representation. When comparing with previous local government elections, in this election, women representation has been increased from 02% to 23%. However, this study recommends that as this is the one and only election hither to held based on quota system in Sri Lanka, the drawbacks in the electoral system and the challenging consequences have to take into consideration to achieve the intended goals of the system in the forthcoming elections.*

**ஆய்வுச் சுருக்கம்:**

2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல்,பெண்களுக்கான இடவொதுக்கீட்டின் அடிப்படையில் இடம்பெற்றமுதலாவதுதேர்தலாகும். இத்தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவம் முன்னயகாலங்களுடன் ஒப்பிடுகையில்,கணிசமானளவில் அதிகரித்துள்ளதுஎன்பதைமறுப்பதற்கில்லை. ஆயினும்,பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படுவதன் ஊடாகஅரசியலில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குஅடையப்பட்டதா? என்பதுஆய்விற்குரியவிடயமாகும். இவ்விடயத்தினைஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டும்,குறித்தபெண்களுக்கான இடவொதுக்கீட்டுமுறைமைஎத்தகையசவால்களையும்,சந்தர்ப்பங்களையும் கொண்டுகாணப்படுகிறதுஎன்பதைஅறிவதைநோக்கமாகக் கொண்டும் இவ்வாய்வுமேற்கொள்ளபட்டுள்ளது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2023, IRJTSR

இவ் ஆய்வானதுபண்புரீதியானதரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்துபெறப்பட்டுள்ளன. இவ்வகையில் பெறப்பட்டதரவுகள் விவரணப் பகுப்பாய்விற்குஉட்படுத்தப்பட்டுஆய்வின் முடிவுஎட்டப்பட்டுள்ளது.

ஆய்வின் முடிவாக, 2018ஆம்ஆண்டுபெண்களுக்கானஇடவொதுக்கீட்டுமுறைமையானது, உள்ளூராட்சிமன்றங்களில் பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைமட்டும் அதிகரிப்பதற்கானதொருஏற்பாடகவேகவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றது. அன்றில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைஅதிகரிப்பதன் ஊடாகஎதிர்பார்க்கப்பட்ட இலக்குஅடையப்படவில்லைஎன்பதைஅறியமுடிகின்றது. இந்நிலைமைஅரசியலில் குடும்பஆதிக்கம்,சலுகைஅரசியல் ஆகியவற்றைவளர்பதற்கேபயன்பட்டுள்ளதுஎன்பதையும்அறியமுடிகின்றது.

எவ்வாறாயினும் முன்னயகாலங்களில் இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில், 02 வீதமாக இருந்தபெண்களின் பிரதிநிதித்துவம்,சராசரியாக 23 வீதமாகமாற்றமடைவதற்குகாரணமாகஅமைந்திருந்ததுஎன்பதைமறுப்பதற்கும் இல்லை. இடவொதுக்கீட்டின் மூலம் இடம்பெற்றமுதலாவதுதேர்தல்,ஒருமுறைதான் இதுவரைபெண்களுக்கான இடவொதுக்கீட்டின் அடிப்படையில் தேர்தல் இடம்பெற்றுள்ளதுஎன்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். எதிர்காலத்தில் அடையாளம் காணப்பட்டகுறைபாடுகள் நிவர்த்திக்கப்படுவதற்கானநடவடிக்கைஎடுக்கப்பட்டாலேயேபெண் அரசியல் செயற்பாட்டாளர்களாக இருப்பவாகள் உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளவாய்ப்பாகஅமையும்என்பதனையும் இவ்வாய்வுதனதுபரிந்துரையாகமுன்வைத்துள்ளது.

**திறவுச் சொல்:** உள்ளூராட்சிமன்றம்,பெண்கள் பிரதிநிதித்துவம், இட ஒதுக்கீடு,பாலினசமத்துவம்

## அறிமுகம்:

சமகாலஉலகில் நடைமுறையில் உள்ளஆட்சிமுறைகளில் ஜனநாயகஆட்சிமுறைமைசிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. இத்தகைய ஜனநாயகஆட்சிமுறைமையானதுபிரதிநிதித்துவஅரசியலில் தங்கியுள்ளது. பிரதிநிதித்துவம் என்பதுமக்கள் தமதுதேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கில் பிரதிநிதிகளைதெரிவுசெய்யும் செயன்முறையாகும். இத்தெரிவானதுபிரதேச,மாகாணமற்றும் தேசியமட்டங்களில் ஆண்,பெண் என இருபாலாரையும் பிரதிநிதித்துவபடுத்தக் கூடியதாகக் காணப்படுதல் வேண்டும் (பௌசர், 2019). பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படும்போதுபெண்களின் அரசியற் பிரதிநிதித்துவம்,பொதுவாகஎல்லாஉலகநாடுகளிலும் குறைந்தமட்டத்தில் காணப்பட்டதால் இது தொடர்பானகலந்துரையாடல்கள் மிகநீண்டகாலமாகஅரசறிவியலில் பேசும்பொருளாகவுள்ளது.

1890க்கு முன்னர் உலகில் எந்தவொருநாட்டிலும் பெண்கள் சர்வஜன வாக்குரிமையைப் பெற்றிருக்கவில்லை. ஆயினும் 1994 ஆம் ஆண்டளவில்உலகநாடுகளில் 96 வீதமானபெண்களுக்கு இந்தவாய்ப்புக் கிடைத்துள்ளது. பலஜரோப்பியநாடுகளில் பெண்களுக்குவாக்குரிமைவழங்கப்படுவதற்குமுன்னரே இலங்கையில் 1931ஆம் ஆண்டுசமகாலத்தில் ஆண்களுக்கும்,பெண்களுக்கும் சர்வஜன வாக்குரிமைவழங்கப்பட்டது. ஆனாலும் சர்வஜன வாக்குரிமைவழங்கப்பட்டுஎட்டுதசாப்தங்கள் கடந்தநிலையிலும், இன்னும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றையதெற்காசியநாடுகளுடன் ஒப்பிடும்போதுமிகவும் பின்தங்கியநிலையிலேயே இருந்துவருகின்றது. குறிப்பாகநேபாளம் 33.2 வீதம்,பங்களாதேஷ் 19.7 வீதம் மற்றும் இந்தியா 10.9 வீதமாகக் காணப்படுகின்றது(லியனகே, 2012).

இலங்கையின் சனத்தொகைஏறத்தாள 21 மில்லியன் ஆகும். நாட்டின் சனத்தொகையில் 52 வீதமானவர்கள் பெண்களாகக் காணப்படுகின்றனர். பதிவுசெய்யப்பட்டவாக்காளர்களில் 56 வீதமானவர்கள் பெண்களாகும். ஆயினும் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தமட்டில் பாராளுமன்றத்தில் 5.3 வீதமாகவும்,உள்ளுர் மட்டத்தில் (2018 க்குமுன்னர்) 02 வீதத்தினை இதுவரைதாண்டதநிலையிலும்பெண்களின் பிரதிநிதித்துவம் உள்ளது(Kodikara, C. & Samuel, K 2018).

உலகளவில் பின்தங்கியநிலையிலிருந்தஅரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தினைஅதிகரிக்கும் நோக்குடன், 1950 களின் பிற்பகுதியிலிருந்துபெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைஅதிகரிப்பதற்காகஒதுக்கீட்டுமுறைமைநடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது (லியனகே, 2012). இப்பின்னணியில், இலங்கையில் பெண் செயற்பாட்டாளர்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் இதுதொடர்பில் பல்வேறுஅழுத்தங்களைஆட்சியிலிருந்தஅரசாங்கங்களுக்குகொடுத்தன் விளைவாக 2016ஆம் ஆண்டு 1ஆம் இலக்க உள்ளூராட்சிமன்றங்களுக்கானதேர்தல் திருத்தச் சட்டமும், உள்ளூராட்சிமன்றங்களில் பெண்களுக்கான 25 வீத இட ஒதுக்கீடும்சாத்தியமாகியது.

இலங்கையில் கல்வி,சுகாதாரம் போன்றதுறைகளில் ஒப்பீட்டளவில் பெண்களின் சமமானபங்களிப்பு இருந்தாலும்,அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைந்தமட்டத்திலேயேகாணப்படுகின்றது. பலஆய்வுககளில் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதன்படி, இலங்கைஅரசியலில் பெண்கள் இன்னும் இரண்டாம்தரப் பிரைஜகளாகவேஉள்ளனர் (பௌசர், 2019).

உள்ளூராட்சிமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும்போது, உள்ளூர் மட்டத்திலிருந்துபெண்கள் அரசியலில் வலுப்படுத்தப்படுவதற்கானசந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இது பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பானகொள்கைஉருவாக்கம் மற்றும் அமுலாக்கத்திற்குஅவசியமாகும். மறுபுறம் உள்ளூர் மட்டத்தில் இவர்கள்

பெற்றுக்கொள்கின்றபயிற்சிமாகாணமற்றும் தேசியஅரசியலில் ஈடுபடுவதற்கானசந்தர்பத்தினையும் பெற்றுக்கொடுக்கும்.

**ஆய்வுப் பிரச்சினை:**

இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநித்துவம் மிகக் குறைந்தமட்டத்திலேயேஉள்ளது. இதனைஅதிகரிப்பதற்காகவே 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றங்களில் பெண்களுக்கானஇட ஒதுக்கீடுநடைமுறைக்குவந்திருந்தது.வெளிப்படையாகவேபெண்களின் பிரதிநிதித்துவம் இதற்குமுன்னர் இருந்த 02 வீதத்தில் இருந்து 23 வீதமாகசராசரிஅதிகரிப்புஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஏற்பட்ட இவ்வதிகரிப்பின் ஊடாகபெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் எண்ணிக்கைரீதியாகஅதிகரித்திருந்தாலும்,உண்மையில்அரசியில் ஈடுபாடுடையபெண்கள் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்முடிந்ததா? என்பதுஆய்விற்குரியவிடயமாகும்.ஒதுக்கீட்டுமுறைமை,பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில்எவ்வாறானசாதகமற்றும் பாதகஅம்சங்களைக் கொண்டுள்ளது,ஒதுக்கீட்டுமுறைமையில் பெண்பிரதிநிதிகளின் தெரிவில்ஏதாவதுபுறக்காரணிகள் செல்வாக்குச் செலுத்தியதா? போன்றவிடயங்களைஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வுமேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் பகுப்பாய்வும்,முடிவும்:**

**பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுமுறைமைஎன்றால் என்ன?**

அரசியல் பிரதிநிதித்துவஅமைப்புக்களின் பெண்களின் பிரதிநிதித்துவத்தைஅதிகரிக்கபயன்படுத்துகின்றஒருமுறைமைஎனச் சுருக்கமாகக் கூறலாம். அதாவதுஅரசியல் பிரதிநிதித்துவஅமைப்புக்களில் பெண்களின் எண்ணிக்கைகுறைவாக இருக்கும்போது,அதனைச் சீர்செய்வதற்குகையாளப்படுகின்றஒருபெறிமுறைமைஎனலாம். சமூகத்தில் பின்தங்கியநிலையில் இருக்கின்றவகுப்பினரைசமூகத்தில் உள்ள ஏனைய தரப்பினருடன் முன்னேற்றுவதற்கானமுயற்சிகள் இயற்கையானவளர்ச்சியைக் காட்டாதசந்தர்ப்பங்களில், இத்தகையஒதுக்கீட்டுமுறைகள் நடைமுறைபடுத்தப்படுகின்றன. பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் என்பதற்குஅப்பால் இளைஞர்களின் பங்குபற்றுதல்கள்,கீழ்நிலைசாதியினரின் பிரதிநிதித்துவம் மற்றும் சிறு இனக் குழுக்களின் பிரதிநிதித்துவம் ஆகியவற்றிலும் இவ் உபாயமுறைமைபயன்படுத்தப்படுகின்றது.

சமகாலஉலகில் இரண்டுவகையானபெண்களுக்கான இட ஒதுக்கீட்டுமுறைமைகள் நடைமுறையில் பின்பற்றப்பட்டுவருகின்றன. அவையாவன: வேட்பாளர் ஒதுக்கீடுகள்,மற்றும் ஒதுக்கப்பட்ட இடங்கள். அரசியல் கட்சிகளின் வேட்பாளர் பட்டியலில் குறைந்தபட்சம் பெண் வேட்பாளர்கள் இருக்கவேண்டுமென்றுவேட்பாளர் ஒதுக்கீடுகுறிப்படுகின்றது. ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீடுமுறையானது,அரசியல் நிறுவனங்களில்


© 2023, IRJTSR

சட்டரீதியாகபெண்களுக்குகுறிப்பிட்டஎண்ணிக்கையிலான இடங்களைஒதுக்குவதாகும். இதன் மூலமாகஅரசியல் பிரதிநித்துவநிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் காணப்படுகின்றபாலினசமத்துவமின்மையினைச் சீர்படுத்துவதன் மூலமாகஅனைத்துமக்களின் பங்களிப்புடனானகொள்கைஉருவாக்கச் செயற்பாட்டிற்குப் பங்களித்தலாகும்(லியனகே, 2012).

**உலகில்பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுமுறைமைதொடர்பிலானஅவதானம்.**

பாராளுமன்றம், உள்ளூராட்சிமன்றங்கள் மற்றும் மாகாணசபைகள் போன்றஅரசியல் நிறுனங்களில் உலகநாடுகளின்அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருந்தது. இதற்குத் தீர்வாகஅண்மைக் காலமாகஉலகநாடுகளில் பாலின இட ஒதுக்கீட்டுமுறைமைஅறிமுகப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் ஒருஅரசியல் நிறுவனத்தில் தெரிவுசெய்யப்படுகின்றபிரதிநிதிகளில்,ஒருகுறிப்பிட்டசதவீதம் பெண்களாக இருக்கவேண்டும் என்பதைஉறுதிசெய்வதாகும். உலகில் எவ்வாறாயினும், 1970களில் இருந்தேஅரசியலில் பெண்கனின் பிரதிநிதித்துவத்தைஅதிகரிப்பதற்கானஒதுக்கீட்டுமுறைமைநடைமுறையிலிருந்துவருகின்றது. இம்முறைமைஅறிமுகப்படுத்துவதற்குமுன்னர் டென்மார்க்,பின்லாந்து, ஐஸ்லாந்து,நோர்வேமற்றும் சுவீடன் ஆகியநாடுகளிள்பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் முன்னணியில் இருந்தன(லியனகே, 2012).

எவ்வாறாயினும், 1990களில்இருந்துஅபிவிருத்திஅடைந்துவரும் நாடுகளிலும் அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தைஅதிகரிப்பதற்கான இட ஒதுக்கீடுஅறிமுகப்படுத்தப்பட்டுவருகின்றது. குறிப்பாகபீஜிங் மாநாட்டைத் (1995)தொடர்ந்தேஉலகெங்கிலும் உள்ளபெண்களஅமைப்புககள் அரசியல் பிரதிநிதித்துவத்தைஅதிகரிப்பதற்கான,பாலினஒதுக்கீட்டிற்கானஅழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கின. 2005ஆம் ஆண்டுகளில் 40க்கு மேற்பட்டநாடுகள் அரசியலமைப்பில் திருத்தங்கள் ஊடாகஅல்லதுவேறுவகையானசட்டங்கள் ஊடாக இவை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.அதனடிப்படையில், 2012 ஆம் ஆண்டுகளில் 90 நாடுகளில் ஒதுக்கீட்டுமுறைமைசட்டரீதியாகஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன(லியனகே, 2012).

அரசியலில் பாலின இட ஒதுக்கீட்டின் அறிமுகம்,பெண்கள் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பானதரவரிசையில் குறிப்பிடத்தக்களவுமாற்றத்தினைஏற்படுத்தியிருந்தது. தற்போதையபுள்ளிவிபரங்களின் அடிப்படையில் ருவண்டா,ஆர்ஜன்டீனா,கொஸ்டாரிக்கா,தென்னாபிரிக்காமற்றும் மொசாம்பிக் ஆகியநாடுகள் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பிலானதரவரிசையில் முன்னணியில் உள்ளன.


© 2023, IRJTSR

**தென்னாசியநாடுகளில் பெண்களுகான இடவொதுக்கீடுதொடர்பிலானஅவதானம்:**

1970கள் மற்றும் 1980களில் தெற்காசியப் பிராந்தியத்தில் அரசியலில் பெண்களின் பிரதிநித்துவம் தொடர்பிலான,பாலினஒதுக்கீடுதொடர்பிலானவிவாதங்கள் ஆரம்பிக்கத் தொடங்கியிருந்தன. 1975ஆம் ஆண்டுமெக்சிக்கோவில் நடைபெற்றமுதல் ஐக்கியநாடுகள் பெண்களுக்கானமகாநாடுமற்றும் 1975 தொடக்கம் 1985 வரையிலானபெண்களுக்கானஜக்கியநாடுகள் பெண்கள் தசாப்தபிரகடனம் போன்றமுயற்சிகள் மூலம் இவ்விழிப்புணர்வுஏற்பட்டதுஎனலாம்(கிஷாலினிபின்னரே, சூலனி கொடிக்கார, 2003).

தெற்காசியப் பிராந்தியத்தில் நேபாளத்தில் பெண்களுக்கு 33 வீதம் இட ஒதுக்கீட்டினைஏற்படுத்தியநாடாகும். அத்துடன் அரசியல் கட்சிகள் வேட்பாளர் பட்டியலில் 50 வீதம் பெண்களுக்குஒதுக்கப்படவேண்டும் என்பதனையும் உறுதிசெய்கின்றது. இந்தியாவைப் பொறுத்தமட்டில், இந்தியஅரசியமைப்பின் 73 மற்றும் 74ஆம் ஏற்பாடுகள்,அரசியலில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கானஏற்பாடுகளைச் செய்துள்ளன. எவ்வாறாயினும் இந்தியப் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும்,பெண்களுக்கான இட ஒதுக்கீடு இல்லை. 1992 ஆம் ஆண்டிலிருந்து உள்ளூராட்சிமன்றங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 33 வீதமாகஉள்ளது. பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில்,பீஜிங் மாநாட்டைத் தொடர்ந்து இதற்கானஅழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது. 2000ஆம் ஆண்டுபதவிக்குவந்த ஜெனரல் பர்வேஸ் முஷாரப் அரசுபெண்களுக்கான இட ஒதுக்கீட்டினைஏற்படுத்துவதுதொடர்பில் இணங்கியிருந்தது. அதனடிப்படையில் உள்ளூராட்சிமன்றங்களில்,33 வீதம் இட ஒதுக்கீட்டினைஏற்படுத்தியிருந்தது. ஆயினும் பாராளுமன்றத்தில் 17 வீதமும்,மாகாணமட்டத்தில் 17.6 வீதமான இடங்களேஒதுக்கப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானில், 2004ஆம் ஆண்டுஅரசியலமைப்பின் 83 ஆவதுபிரிவுதேசியசட்டமன்றத்தில் 27 வீதம் பெண்களுக்குஒதுக்கீடுசெய்யப்பட்டது. மேல்சபையில் 17 வீதமும்,மாகாணமட்டத்தில் 25 வீதமும் இட ஒதுக்கீடுஏற்படுத்திக் கொடுக்கப்பட்டாலும், உள்ளூர் மட்டத்தில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டைஅனுமதிக்கவில்லை.பங்களாதேஷ் 1972 ஆம் ஆண்டுஅரசியலமைப்பில்,பாராளுமன்றத்தில் உள்ள 315 இடங்களில் 15 இடங்களைபெண்களுக்குஒதுக்கியது. பின்னர், 1978 இல் 30 இடங்களாகஉயர்த்தப்பட்டது. 2009 ஆம் ஆண்டுஅரசியலமைப்புத் திருத்தத்துடன்,பாராளுமன்றத்தில் பெண்களுக்கான இட ஒதுக்கீடுஅறிமுகப்படுத்தப்படடது. இன்றுபாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் மற்றும் மாகாணமட்டத்திலும் பாலினஒதுக்கீட்டுமுறைநடைமுறையில் உள்ளது(லியனகே, 2012).

தெற்காசியாவில் இலங்கையிலேஅரசியலில் பெண்களுக்கான இட ஒதுக்கீடுமிகவும் காலதாமதமாகஅறிமுகப்படுத்தப்பட்டது. (2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சட்டத்தின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுபின்னர் 2017 ஆம் ஆண்டு 16ஆம் இலக்கச் சட்டம்திருத்தப்பட்டு 2018 ஆண்டுமுதலில் இதற்கானதேர்தல்

நடைபெற்றி(ருந்தது)எவ்வாறாயினும்,மாகாணமற்றும் தேசியமட்டங்களில் இவ் ஒதுக்கீட்டினைநடைமுறைப்படுத்துவதற்கானஎத்தகையமுயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

**இலங்கையில் உள்ளூராட்சிமன்றங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுமுறைமை:**

2016ஆம் ஆண்டு 01ஆம் இலக்க உள்ளூராட்சிமன்றங்களுக்கானதேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. குறித்த இச் சட்டமானது 2017ஆம் ஆண்டு 16ஆம் இலக்கசட்டத்தின் மூலம் பின்னர் திருத்தப்பட்டிருந்தது. இத் திருத்தச் சட்டத்திற்குஅமைய, உள்ளூராட்சிமன்றங்களுக்கானஅங்கத்தவர்களில் 60 வீதமானவர்கள் வட்டாரஅடிப்படையிலும், 40 வீதமானவர்கள் விகிதாசாரஅடிப்படையிலும் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வட்டாரங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயேஒரு உள்ளூராட்சிமன்றத்தின் மொத்தஅங்கத்தவர் தொகைதீர்மானிக்கப்படும். அதாவதுவட்டாரங்களின் எண்ணிக்கையினை 60 வீதமாகக் கொண்டு,அத்துடன் 40 வீதமானஅங்கத்தவர்களின் எண்ணிக்கை கூட்டப்பட்டுமொத்தஅங்கத்தவர்கள் எண்ணிக்கைதீர்மானிக்கப்படும்(Gezeette, 2017, Aug. 31).

இம்மொத்தஅங்கத்தவர்களில் 25 வீதம் பெண்உறுப்பினர்களாக இருப்பர். உதாரணமாகஒரு உள்ளூராட்சிமன்றத்தின் பிரதேசத்திற்குஉட்பட்டவட்டாரங்களின் எண்ணிக்கை 12ஆக இருக்குமாயின்,ஒவ்வொருவட்டாரத்திலும் இருந்துஒருவர் என்னும் அடிப்படையில் 12 உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். இவ்வெண்ணிக்கை 60 வீதமாகக் கொள்ளப்படும். மிகுதி 40 வீத்த்திற்கும் 08 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு,மொத்த இங்கத்தவர்கள் 20 ஆகஅமையும். இங்கு இரு வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். முதலாவதுவேட்புமனுவில் வட்டாரஅடிப்படையில் தெரிவுசெய்யப்படும் வேட்பாளர்களின் பெயர்களைஅடிப்படையாகக் கொண்டதாகும். இவர்களுள்கட்டாயமாக 10 சதவீதமானவர்கள் பெண்களாக இருக்கவேண்டும். இரண்டாவதுவேட்புமனுவில் விகிதாசாரமுறையில் தெரிவுசெய்யப்படவேண்டியஉறுப்பினர்களைக் கொண்டதாகும். இதில் 40 விதத்திற்குமேலதிகமாக 03 நபர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவேண்டும். இதில் 50 வீதமானவர்கள் கட்டாயமாகப் பெண்களாக இருக்கவேண்டும். இங்குஒரு உள்ளூராட்சிமன்றத்திற்கானஉறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றபோது 25 வீதமானவர்கள் பெண்களாக இருக்கவேண்டும். இதனடிப்படையில்,மொத்த உள்ளூராட்சிமன்றங்களின் எண்ணிக்கை 4486இல் இருந்து 8356 ஆகஉயர்த்தப்பட்டுள்ளது. இதில்பெண் உறுப்பினர்கள் 25 வீதம்தெரிவுசெய்யப்படுவார்கள் எனஎதிர்பார்க்கப்பட்டது.

இங்குபெண் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றபோது, இவ்விருவேட்புமனுக்களில் இருந்தும் பெண்கள் தெரிவுசெய்யப்படலாம். இதன்போதுஎவ்வேட்புமனுவில்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

இருந்துதெரிவுசெய்யப்படுவதுஎன்பதுகட்சியின் செயலாளருக்குவழங்கப்பட்டிருந்தஅதிகாரமாகக் காணப்படுகின்றது.

**2018ஆம் ஆண்டு இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் இடம்பெற்றதேர்தலில் பெண் பிரதிநிதித்துவம்:**

பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலானதேர்தல், 2018 ஆம் ஆண்டுபெப்ரவரிமாதம் 10ஆம் திகதிநடைபெற்றிருந்தது. 341 உள்ளூராட்சிமன்றங்களுக்காக இடம்பெற்ற இத்தேர்தலில் 8325பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இத்தேர்தலில் போட்டியிட்ட 56000 வேட்பாளர்களில் 17500 வேட்பாளர்கள் பெண்களாவர்(நந்தினி, 2023).

வர்த்தமானி 2061/42-9 வெளியிடப்பட்டதரவுகளுக்குஅமைய,தெரிவுசெய்யப்பட்ட 8325 உறுப்பினர்களில் 1919 பெண்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இவர்களில் 535 பேர் வட்டாரஅடிப்படையிலும், 1384 பேர் விகிதாசாரஅடிப்படையிலும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இது மொத்ததொகையில் 23 வீதமாகும். இலங்கையில் இதற்குமுன்னர் இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றங்களுக்காகதேர்தலில் 02 வீதத்தினைவிடகுறைவாகவே இருந்தது. எனவே 2018ஆம் ஆண்டு இடம் பெற்றதேர்தலேவரலாற்றில் முதல் முறையாகபெண்பிரதிநிதிகள் அதிகமாகத் தெரிவுசெய்யப்பட்டதேர்தலாகஅமைந்திருந்தது(நந்தினி, 2023).

**உள்ளூராட்சிமன்றங்களுக்கான இட ஒதுக்கீட்டில் உள்ளசவால்கள்:**

உள்ளூராட்சிமன்றங்களில் பெண்களுக்கான இடவொதுக்கீட்டினைஅதிகரிப்பதில் பாரியளவில் தாக்கம் செலுத்தியுள்ளதுஎன்பதைமறுப்பதற்கு இல்லை. ஆயினும்,குறித்த இடவொதுக்கீட்டுமுறையில் பலசவால்களையும் பெண்கள் எதிர்நோக்குகின்றார்கள். உள்ளூராட்சிமன்றங்களில் வட்டாரஅடிப்படையிலானதெரிவிற்கானவேட்புமனுவில் 15 வீதமான இடத்தினைபெண்களுக்குஒதுக்குவதற்கேதேத்தல்கள் ஆணைக்குழுவிரும்பியதுஆனால்,அரசியல் கட்சிகள் அதனைப் 10 வீதமாகக் குறைத்துவிட்டனஎனமுன்னால் தேர்தல் ஆணையாளர் மகிந்ததேசப்பிரியகுறிப்பிட்டிருந்தார். இவ்விடயம் குறிப்பிடுவது,அரசியல் கட்சிகள் மனப்பூர்வமாக இவ்விடயத்தினைஏற்றுக்கொள்ளவில்லை. எனவேஅடிப்படையிலேயேபிரச்சினைகள் உண்டு. அதேவேளை,சர்வதேசரீதியில் பெண்களுக்கான இடவொதுக்கீடு 33 வீதமாக இருக்கையில் இலங்கையில் 25 வீதம் போதுமானதல்ல(பௌசர், 2019) என்கின்றனர்.

அரசியல் கட்சிகளின் செயாளருக்கு யார் பெண் பிரதிநிதிகளாகவிகிதாரப் பட்டியலில் இருந்துதேர்ந்தெடுப்பது,மற்றும் எவ் வட்டாரங்களைபெண்

போட்டியானர்களுக்குஒதுக்குவதுஎன்பதுதொடர்பில் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதுஒருபுறம் அதிகாரத் துஸ்பிரயோகத்தில் ஈடுபடுவதற்கானசந்தர்ப்பத்தினையும்,மறுபுறம் குடும்பஅரசியல் பிரதேசமட்டத்திலும் தோன்றுவதற்குமானசந்தர்ப்பத்தையும்ஏற்படுத்திவிடுகின்றது.இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இவ் ஒதுக்கீட்டுமுறைமைவிகிதாசாரப் பட்டியலிலேஅதிகளவானபெண்கள் தெரிவுசெய்யப் படுகின்றனர். அதுதேர்தலில் பெண்கள் வெற்றிபெறமுடியாதவர்கள் என்கின்றதோற்றப்பாட்டைஏற்படுத்திவிடுகின்றது. அத்துடன் பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டுவெல்லக் கூடியவட்டாரத்திலிருந்தும் அன்னியப்படுத்தப்படுகின்றநிலையினைஏற்படுத்திவிடுகின்றது.

25 வீதமானபெண் உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்தைஒரு உள்ளூராட்சிமன்றத்தில் ஏற்படுத்துகின்றபொறுப்புதேர்தல்கள் ஆணைக்குழுவிற்கேவழங்கப்பட்டுள்ளது. ஆனாலும்,கணிப்பிடுவதற்கானகணிதச் செயல்முறையில் ஏற்படும் சிக்கல்களினால் இந்நிலையைஅடையமுடியாதநிலைஏற்பட்டுள்ளது. குறிப்பாகஒரு உள்ளூராட்சிமன்றத்திற்குதேர்ந்தெடுக்கப்பட்டஉறுப்பினர்களின் எண்ணிக்கைஒதுக்கப்பட்டதொகையைவிடஅதிகமாகஅருந்தால் 25 இடவொதுக்கீடுகவனத்தில் கொள்ளப்படமாட்டாது. இது மேலதிகநிலைமைஎனஅமைக்கப்படுகின்றது. மற்றையதுஒருகட்சிஅல்லதுசுயேட்சைக்குழுபெறுகின்றமொத்தவாக்குகளில் 20 வீத்திற்கும் குறைவானவாக்குகளைப் பெற்று, மூன்றுக்கும் குறைவானஆசனங்களைப் பெற்றால் இவ்ஒதுக்கீட்டுமுறைமைகருத்தில் கொள்ளப்படமாட்டாதென்றமட்டுப்பாடுகளும் உண்டு இதனடிப்படையில் குறித்ததேர்தலில் 10 உள்ளூராட்சிமன்றங்களில் பெண்களுக்கான இடவொதுக்கீடுபின்பற்றப்படவில்லை(நந்தினி இ 2023).

அதேவேளை முஸ்லீம் பெண்கள்வேட்பாளர்களாகப் போட்டியிடுவதைஅவர்களின் மதத் தலைவர்கள் எதிர்க்கின்றனர். தேர்தலில் போட்டியிடுவதற்குபாலியல் இலஞ்சம் கோரப்பட்டமைதொடர்பிலானகுற்றச் சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன(Kodikara, C & Samuel, K. 2018).

உள்ளூராட்சிமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இடவொதுக்கீட்டுமுறைமைஒருசாதகஅம்சமாகமுன்னையதேர்தல்களில் கிடைக்கப்பெற்றபிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் நோக்குகின்றபோதுதென்பட்டாலும், இம்முறைமைபலகுறைபாடுகளையும் தன்னகத்தேகொண்டுள்ளது.

**உள்ளூராட்சிமன்றங்களுக்கான இட ஒதுக்கீட்டில் உள்ளசந்தர்ப்பங்கள்:**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

இலங்கையில் 1931 ஆம் ஆண்டுபெண்களுக்கானசர்வஜனவாக்குரிமைவழங்கப்பட்டது. ஆயினும் அன்றிலிருந்துஅரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைந்தமட்டத்திலேயே இருந்துவருகின்றது. இலங்கையின் மொத்தசனத்தொகையில் 52 வீதமானவர்கள் பெண்களாவர்.பெண்களின் குறைந்தஎண்ணிக்கையிலானஅரசியல் பிரதிநிதித்துத்தைசீர்படுத்துவதற்காகபலபெண் செயற்பாட்டாளர்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் 20 ஆண்டுகளாகசெயற்பட்டதன் விளைவேபெண்களுக்கான இடஒதுக்கீட்டுமுறைமையின் அறிமுகமாகும்.

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் தேர்தல் வன்முறை, ஊழல் போன்ற ஜனநாயகத்திற்குவிரோதமானசெயற்பாடுகளைக் குறைக்கும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது. எனவேஅதிகரித்தபெண்களின் பிரதிநிதித்துவம்,சட்டத்தைமதிக்கும் பண்புகொண்டஒருசமூகத்தைகட்டியெழுப்புவதற்கானசந்தர்ப்பத்தைபிரதேசமட்டத்திலேஆரம்பிப்பதற்கான சூழல் ஏற்படும். ஏனெனில் பென்கள் அதிகளவில் உள்ளீர்ப்புச் செய்யப்படும்போது,குறைந்தளவுவன்முறையும்,மிகையானசகிப்புத் தன்மையும் ஏற்படும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைஉள்நாட்டுயுத்தத்தைச் சந்தித்தஒருநாடு. போரினால் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பாகவடக்குமற்றும் கிழக்கில் அதிகமாகவாழ்கின்றனர். இங்கு 40 ஆயிரம் வரையிலானபெண் தலைமைதாங்கும் குடும்பங்கள் காணப்படுவதால்,பிரதேசமட்டத்தில் செயற்படுகின்ற உள்ளூராட்சிமன்றங்கள்,உருவாக்கப்படுகின்றதீர்மானங்கள் அவர்களின் வாழ்வில் மாற்றத்தைஏற்படுத்துவதற்கானசந்தர்பத்தைஏற்படுத்திக் கொடுக்கின்றது.

பெண்கள் தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கானபயிற்சி,பொதுப் பதவிகளைவகிப்பதற்கானசந்தர்ப்பம்,தீர்மானம் எடுத்தலில் பங்களிப்பு,மற்றும் மாகாணமற்றும் தேசியஅரசியலில் இடவொதுக்கீட்டுமுறைமையினைஅறிமுகப்படுத்துவதற்கானமுன்னேற்பாடுஆகியசந்தர்ப்பங்களையும் இவ்வொதுக்கீட்டுமுறைமைதன்னகத்தேகொண்டுள்ளது.

**முடிவுரை:**

இலங்கைஅரசியலில் குறைந்தளவிலானபெண்களின் பிரதிநித்துவம் என்பதுபெரும் குறைபாடாகப் பலகாலமாகப் பேசப்பட்டாலும் அதுதொடர்பிலானஆக்கபூர்வமானநடவடிக்கைகள் எதுவும் நீண்டகாலமாகப் பேசப்படவில்லை. இலங்கையில் இடம் பெற்றஉள்நாட்டுயுத்தம், இத்தகையவிடயங்களில் கவனம் செலுத்தப்படுவதற்கானவாய்ப்பினைகுறைத்திருந்ததுஎன்பதைமறுப்பதற்கும் இல்லை. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளூராட்சித்தேர்தல் திருத்தச்

சட்டம், இவ்விடயம் தொடர்பில் முன்னேற்றகரமானதுஎன்பதைமறுப்பதற்கும் இல்லை. தென்னாசியாவிலே இட ஒதுக்கீட்டைகாலம் தாழ்த்தியேனும் நடைமுறைக்குகொண்டுவந்திருப்பதுபெண்களின் அரசியல் பிரதிநித்துவம் தொடர்பில் பெரியமாற்றத்தைக் கொண்டுவரும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் இவ் ஒதுக்கீட்டுமுறைமைதன்னகத்தேசிலகுறைபாடுகளையும் கொண்டுள்ளதுஎன்பதனை இத்திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் 2018 ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் வெளிக்காட்டியிருந்தது. அடையாளம் காணப்பட்டகுறைபாடுகள் மிகச் சரியாகஅணுகப்பட்டுசீர்படுத்துவதற்கானமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே,பெண்களின் அரசியல் பிரதிநித்துவஅதிகரிப்பின் மூலமாகஎதிர்பார்க்கப்பட் பாலாபலன்களைஅடையமுடியும். அன்றேல் வெறும் எண்ணிக்கைமட்டுமானஅதிகரிப்பிற்கே இவ்இடவொதுக்கீடுவழியேற்படுத்திக் கொடுத்ததாகஅமைந்துவிடும். நடைமுறைஅரசியலில் இவ் இடவொதுக்கீட்டை ஏனைய மட்டங்களுக்கும் எடுத்துச் செல்வதற்கானஆர்வமும் குறைந்தமட்டத்திலேயேஅவதானிக்கமுடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்:**


[1] Fowzar M. A. M. (2019), **Ilankaiyilulurachimanranhalilpanhalinarasiyalperathinithithuvam: 2018aam aandaiyaulurachimanratharthlaimaiyapaduthiyaaaivu**, Journal of Social Review 6(2), Department of Social Sciences, Faculty of Arts & Culture, South Eastern University of Sri Lanka.

[2] Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka, (2017, August 31***) Local authorities' election (Amendment)*** At, No 16 of 2017, URL Available on: https://elections.gov.lk/web/wp-content/uploads/publication/acts/16-2017_E.pdf

[3] Kamala. Li. (2012) Aan pen **arasiyalperathinithithuvamsamamanatha? Pankumuraricodpadumarumpayanpadu,** frarichepartisdipdung (FES) valiyidu.

[4] Kamala. Li. (2012) **Ilankaiyilulurachimanranhalilpanhalinarasiyalperathinithithuvam:** frarichepartisdipdung (FES) valiyidu.

[5] Kishalinipintro, J. shulani co. (2003), **Ilankaiyilpanhalumaarchimuraium,** enathuvakathaihalukanasarvathesa Nilayam, colombo.

[6] Kodikara, C. & Samuel, K. (2018) ***The significance of the 25% quoto for women in Local Government***, URL Available on: https://groundviews.org/2018/02/07/the-significance-of-the-25-quota-for-women-in-local-government/

[7] Nanthini (2023) **ulurachimanratharthalumpenhalathuvahipahamum,** URL Available on: https://www.virakesari.lk/article/149300